
# ஆனால் அன்பு திருத்தும் தன்மை வாய்ந்தது என்பது உங்களுக்குத் தெரியும்



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்



## செய்தி: 65-04-29E மணவாட்டியைத் தெரிந்துகொள்ளுதல்

என்னிடம் ஒரு செய்தியுண்டு, அதற்கு நான் உத்திரவாதமுள்ளவனாயிருக்கிறேன். அநேக முறை, நான் ஒரு பயங்கரமான மனிதன்

என்றும், எனக்கு ஜனங்கள் என்றால் பிரியமில்லை என்றும், அவர்களை எப்பொழுதும் குற்றப்படுத்திக் கொண்டிருக்கிறேன் என்றும் ஜனங்கள் என்னைக் கருதியுள்ளனர் (சற்று உட்கார்ந்து, ஒரு நிமிடம் சிந்தித்துப் பார்க்காத யாராகிலும் ஒருவர்) அது உண்மையல்ல நான் ஜனங்களை நேசிக்கிறேன்.

**ஆனால் அன்பு திருத்தும் தன்மை வாய்ந்தது என்பது உங்களுக்குத் தெரியும்.**

9. உங்கள் சிறிய மகன் தெருவில் உட்கார்ந்து

கொண்டிருந்தால், நீங்கள், “சிறுவனே, நீ அங்கு உட்காரக் கூடாது” என்று சொல்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். கார்கள் அவனை கடந்து வேகமாக சென்று கொண்டிருக்கின்றன. நீங்கள் அவனை உள்ளே கொண்டு வருகிறீர்கள். அவன் மறுபடியும் வெளியே ஓடிவிடுகின்றான். அவனை நீங்கள் திருத்த வேண்டும். அவன் மேல் உங்களுக்கு அன்பு இருந்தால். அவனைத் திருத்துவீர்கள். நீங்கள் அதை செய்ய வேண்டுமானால்...

ஒரு மனிதன் ஒரு சிறு படகில் ஆற்றில் மிதந்து நீர் வீழ்ச்சியை நோக்கி சென்று கொண்டிருப்பதை கண்டு, அந்த படகு நீர் வீழ்ச்சியை அடைந்தால் அது மூழ்கிவிடும் என்று நீங்கள் அறிந்திருப்பீர்களானால், நீங்கள் அவனிடம், “ஜான், நீ சற்று சிந்திக்க வேண்டும் உன்னால் அதை கடக்க முடியாது” என்றா கூறுவீர்கள்? அவனால் கடக்க முடியாது என்று நான் அறிந்திருந்தால், என்னால் முடிந்தால் அவனைக் குலுக்கி படகிலிருந்து வெளியே தூக்கிவிடுவேன். **ஏனெனில்**

**அன்பு தான் அப்படி செய்யத் தூண்டுகிறது.**

**10.** நான் பிரசங்கிக்கும் இந்த செய்திகளில், ஒரு உபதேசத்தையும் (Doctrine) நான் நுழைக்க முயல்வதில்லை. அதையே நான் என் சொந்த சபையில் செய்கிறேன். ஆனால் வெவ்வேறு ஸ்தாபனங்களை சேர்ந்தவர்களும் வெவ்வேறு கருத்துக்களைக் கொண்ட மனிதரும் ஸ்திரீகளும் கூடியிருக்கும் போது, நான் பொதுவாக பேசி அதை விளக்க முயல்கிறேன். ஆனால் நீங்கள் தேவனுடைய ஆவியால்

பிறந்திருந்தால், அதன் உள்ளான அர்த்தத்தையறிந்து கொள்ள அது போதுமானதாயிருக்கும். கிறிஸ்துவ மனிதர்களாகிய மெதோடிஸ்டுகள், பாப்டிஸ்டுகள், பிரஸ்பிடேரியன்கள் போன்றவர்களாகிய நீங்கள், நான் கூறுவதன் அர்த்தத்தை புரிந்து கொள்வீர்களென நம்புகிறேன்.

